**கமநல அபிவிருத்தி நிதியம் - 2018**

---

## 1.1 பாதகமான அபிப்பிராயம்

கமநல அபிவிருத்தி நிதியத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தின் காரணமாக நிதியத்தில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் பாதகமான அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படுகின்றன.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பணியகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் மற்றும் நிலைமையின் காரணமாக முகவராண்மையின் தொடர்ந்து நிலைத்திருத்தல் தொடர்பான பொருண்மையான நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள்

அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.4 நிதிக்கூற்றுக்கள்

----------------------------------

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

------------------------------------------------------------------------------------------------------------

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணளித்தகைமை பேணப்பட்டு சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான “சிறப்பான முறையில் திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும்.

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| (அ) | ஜப்பான் உதவிச் செயற்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட 140 நீர் பம்பிகள் மற்றும் 2,464 உழவு இயந்திரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 153,986,174 பணம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 27,149,565 தொகையான கடன் தவணைப் பணம் மீளாய்வாண்டிற்கான வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட நிலுவையான தவணைப் பணத்தை கணக்கீடு செய்வதற்காக உழவு இயந்திர வைப்புக் கணக்கு பகுப்பாய்வு செய்ய வேண்டியிருந்ததுடன் அதற்காக கமநல அபிவிருத்தி ஆணையாளரால் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய நீர்பம்பி மற்றும் உழவு இயந்திர தவணைப் பணம் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் விற்பனை நிலையங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் கமநல சேவை நிலையக் கட்டிடங்களை அபிவிருத்தி செய்வதற்காக செலவு செய்யப்பட்ட முறையே ரூபா 6,197,039 மற்றும் ரூபா 6,069,613 பணம் மூலதனமாக்கப்படாது<br><br>செலவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மேலும் இது சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கட்டிடங்களை நிர்மாணித்தல், புதுப்பதித்தலுக்காகச் செலவு செய்யப்பட்ட பணம் மூலதனமாக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | புத்தளம் மாவட்டத்திலுள்ள குடாவெவ கமநல சேவை நிலையத்தில் இறாக்கைகளைத் தயாரிப்பதற்கும் கண்ணாடி அலுமாரிகளைக் கொள்வனவு செய்வதற்குமாக செலவு செய்யப்பட்ட ரூபா 95,500 பணம் மூலதனமாக்கப்படாது ஆண்டிற்கான செலவாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இறாக்கைகளை தயாரிப்பதற்கும் கண்ணாடி அலுமாரிகளை கொள்வனவு செய்வதற்கும் செலவு செய்யப்பட்ட பணம் மூலதனமாக்கப்படல் வேண்டும். |

### 1.5.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
| --- | --- | --- |
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் ஏடுகளின் பிரகாரம் வைப்புக் கணக்குகள் மீதி ரூபா 241,158,980 ஆக இருந்தும் திறைசேரி ஏடுகளின் பிரகாரம் வைப்புக் கணக்குகளின் மீதி ரூபா 241,821,612 ஆக இருந்தது. அதற்கிணங்க ரூபா 662,632 வித்தியாசத்தை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பரீட்சித்துப் பார்ப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவினால் இதனை தீர்த்து வைத்தல் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் குழுவின் சிபார்சின் அடிப்படையில் மீதிக்கு தேவையான செம்மையாக்கல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என தயவாகத் தெரிவிக்கிறேன். | வைப்புக் கணக்கிலுள்ள வித்தியாசத்தை இனங்கண்டு தீர்த்து வைக்கப்படுதல் வேண்டும். |

## 1.6. பெற வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துக்கள் | சிபார்சு |
| --- | --- | --- |
| கமநல சேவை நிலையம் மற்றும் விவசாய அமைப்புக்களுக்கு 2010 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட 02 சக்கர உழவு இயந்திரங்கள் பெட்டிகள் மற்றும் 04 சக்கர உழவு இயந்திரங்கள் பெட்டிகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 6,194,575 பணத்தை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உழவு இயந்திரங்கள் 2006, 2008, 2010, 2012 ஆகிய ஆண்டுகளின் போது வழங்கப்பட்டுள்ளதனால் மேலும் நிலுவையான தவணைப் பணத்தை செலுத்துவதற்காக காலத்தை வழங்குவது பொருத்தமானதல்லாததனால் மேலும் நிலுவையான தவணைப் பணத்தை செலுத்தாத உழவு இயந்திரங்களை திணைக்களத்தால் பொறுப்பேற்று முறைப்படியாக வெளியாக்குவதற்கு பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளது. | உழவு இயந்திரங்கள் பெட்டிகள் கடன் தவணைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|
| வண்ணாத்திவில்லு நார்பயிர் வளர்ப்பு ஆய்வு கூடத்தை நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 518,000 முற்பணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எஞ்சிய முற்பணமான ரூபா 518,000 பணத்தை தீர்த்து வைக்குமாறு தெரிவித்து ஞாபகமூட்டல்கள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிலையத்திற்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சு |
|---|---|---|---|
| நிதிப்பிரமாணத்தின் 371(2), திருத்தப்பட்ட 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கை | முற்பணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிலும் 2018 செப்தெம்பர் மாதத்தின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 100,000 முற்பணங்கள் 94 நாட்கள் தாமதத்தின் பின்னர் முழுப் பணமும் மீளச் செலுத்தி தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | திணைக்கள பிரித் பிங்கம வைபவத்திற்காக திணைக்களத்தின் நலன்புரிச் சங்கம் ரூபா 100,000 பணத்தை செலவு செய்வதற்கு இணங்கியிருந்தது. எனினும், அப்போது நலன்புரிச் சங்கத்தின் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றதனால் பதவிநிலை உத்தியோகத்தர் கூட்டத்தின் போது நலன்புரிச் சங்கத்தின் புதிய உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படும் வரை அப்பணத்தை கமநல சேவை அபிவிருத்தி நிதியத்திலிருந்து செலவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன் அதற்கிணங்க 2018 திசெம்பர் 28 ஆந் திகதி ரூபா 100,000 பணம் திணைக்களத்தின் பிரித் பிங்கமவிற்கு மீளளிப்புச் செய்தல் அடிப்படையில் முற்பணமாக வழங்கப்பட்டுள்ளது. | முற்பணங்களை உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்த முடியாது விட்டால் உடனடியாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | எனினும், நலன்புரிச் சங்கத்தின் உத்தியோகத்தர்களை நியமித்தல் 2019.01.01 வரை தாமதித்துள்ளதன் அடிப்படையில் முற்பணங்களைத் தீர்த்து வைத்தல் தாமதித்துள்ளதுடன் 2018.12.31 ஆந் திகதி பதவிநிலை உத்தியோகத்தர்களிடமிருந்து சேகரித்த பணத்தை மீள வழங்கியதன் மூலம் முழுப் பணமும் செலுத்தப்பட்டு முற்பணம் தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. இதற்காக கமநல அபிவிருத்தி நிதியத்திலிருந்து செலவுகள் மேற்கொள்ளப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 49,014,580 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 50,009,002 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவகளில் ரூபா 994,422 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இவ் வீழ்ச்சிக்கு உத்தரவுப் பத்திரக் கட்டணம் மற்றும் நிலத்தை நிரப்புதல் வருமானம் ரூபா 9,426,226 ஆல் குறைவடைதல், புதிய விவசாயக் கொள்கையை அமுல்ப்படுத்துதல் செலவு ரூபா 1,909,295 ஆல் அதிகரித்தல் மற்றும் உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிதித்தல் செலவுகள் ரூபா 1,207,905 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது கொழும்பு, மற்றும் கம்பஹா மாவட்ட அலுவலகங்களால் வயல் காணிகள் அல்ல என்று சான்றிதழ் வழங்குதல் மற்றும் வயல் காணிகளை ஏனைய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு சான்றிதழ் வழங்குவதற்காக 18 விண்ணப்பதாரர்களிடமிருந்து 2018 சனவரி மற்றும் மார்ச் | கருத்துரைகள் தரப்பட்டிருக்கவில்லை | பணம் பெற்றுக் கொண்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அல்லது பணத்தை மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மாதங்களில் ரூபா 3,159,355 பணம் நிதியத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் 2019 ஏப்ரல் 17 வரை அந்த உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) 2006 ஆம் ஆண்டிற்கு முன்னர் இனங்ககாணப்பட்ட ரூபா 450,000 தொகையான இருப்பு பற்றாக்குறைக்கு பொறுப்புக்கூறக்கூடிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அந் நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப்பற்றாக்குறை தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் உரிய சிபார்சுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் இருப்பு மீதியைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். | இருப்பு பற்றாக்குறைக்காக பொறுப்புக் கூறக் கூடிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதியத்தின் கடமைகள் மற்றும் பணிகளான விவசாய ஆராய்ச்சிக்காக மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டுகளில் செலவு செய்யப்படாதிருந்த போதிலும் நிதியத்தின் பணிகள் அல்லாத விவசாயிகளைக் கௌரவிக்கும் விழா மற்றும் கமநல முன்னுரிமை நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்காக முறையே ரூபா 1,667,675 மற்றும் ரூபா 831,500 தொகைகள் செலவு செய்யப்பட்டிருந்தன. | அதிகாரச் சட்டத்தின் 97(3) ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள புதிய விவசாயக் கொள்கைகளை அமுல்ப்படுத்துதல், வழங்கல்களை மேம்படுத்துதல் என்பன அபிவிருத்தி செய்தலை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டவைகளாகும். | அதிகாரச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு கமநல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஒரு செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிலிருந்து எதிர்காலத்திற்காக செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |